*******************************************************************************************************

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை -ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப.,

*******************************************************************************************************

ந.க. 30946/ 2018/ பே.மே.1 நாள்.22 .09.2018

| | |
|---|---|
| பொருள் | இயற்கை இடர்பாடுகள் - வடகிழக்கு பருவமழை 2018 - தஞ்சாவூர் மாவட்டம் - முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப்பணிகள் - மாவட்ட அளவிலான அலுவலர்கள் 7 குழுக்களாக நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது. |
| பார்வை | 1). சென்னை, கூடுதல் தலைமைச்செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை ந.க. இ.இ.I(4)/3838/2018/நாள். 25.08.2018.<br>2). மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் |

ஆணை :-

தஞ்சாவூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை 2018-ன் போது ஏற்படும் இயற்கை இடர்பாடுகளான வெள்ளசேதம், ஆறு கரை உடைப்பு, மனிதர்கள் உயிரிழப்பு, கால்நடைகள் உயிரிழப்பு, குடிசைகள் சேதம் மற்றும் பயிர்சேத விவரம் போன்வற்றை கண்காணித்து உடனுக்குடன் நிவாரணப்பணிகளை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு, மாவட்ட அளவிலான அலுவலர்களை 7 குழுக்களாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ளவாறு நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

பட்டியலில் கண்டுள்ள 7 குழுக்களின் அலுவலர்களும் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்படும் இயற்கை இடர்பாடுகளை கண்காணித்திடவும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பாதிக்கப்படும் இடங்களுக்கு தேவையான துயர்துடைப்பு பணிகளை மேற்கொள்ளவும் இயற்கை இடர்பாடுகள் தொடர்பான பணிகளை ஆய்வு செய்திடவும் ஆணையிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் திட்ட அலுவலர் நியமிக்கப்பட்ட குழுக்களுடன் அனைத்து பணிகளையும் ஒருங்கிணைப்பர் என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

தொடர்புடைய அலுவலர்கள்,